## சார்பு நீதிமன்றம், பெருந்துறை
## OS No: 298/2009

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் நாள் Dw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சந்திரசேகரன் |
| த.க.பெயர் | ஜேம்ஸ் |
| கிராமம் | கவுண்டச்சிபாளையம் |
| மாவட்டம் | |
| வயது | 54 |

**பிசா. 2 நாள் 29.08.2025**

**முதல் விசாரணை:** (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

நான் வழக்கின் 5ம் பிரதிவாதி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

1) என் தாயாரின் பென்சன் பாஸ் புத்தகம் பிசாஆ 1.

2) 28.08.2008 தேதியிட்ட புகார் மற்றும் புகார் மனு ஏற்பு சான்று பிசாஆ 2

3) வெள்ளோடு காவல் நிலைய கு எண் 146/2008 ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் பிசாஆ 3.(ஆட்சேபணையுடன்)

4) 2009ம் ஆண்டு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் இதர அதிகாரிகளுக்கு அனுப்பிய புகார் மற்றும் கொரியர் ரசீதுகள் பிசாஆ 4.

5) 13.07.2009 தேதியிட்ட வெள்ளோடு காவல் நிலைய துணை ஆய்வாளர் கொடுத்த புகார் மற்றும் புகார் மனு ஏற்பு ரசீது பிசாஆ 5.

6) 04.04.2012 அன்று செல்வமணி என்பவர் முதலமைச்சர் தனி பிரிவிற்கு அனுப்பிய புகார் மற்றும் ஒப்புகை கடிதம் பிசாஆ 6.

7) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக

அனுப்பப்பட்ட அழைப்பாணை மற்றும் நில அபகரிப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார், மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டதற்கான கடிதம் பிசாஆ 7

8) 06.07.2022 தேதிய பெருந்துறை வட்டாடசியரின் குறிப்பாணை பிசாஆ 8

9) பத்திர பதிவு துறைக்கு அனுப்பி 19.08.2008 தேதிய கடிதம் பிசாஆ 9.

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

எங்கள் குடும்பம் எத்தனை தலைமுறைகளாக சிஎஸ்ஐ கிருஸ்தவ மதத்தை பின்பற்றுகிறோம் என்றால என் தாத்தா காலத்திலிருந்து பின்பற்றுகிறோம். என் தாயாரும் தகப்பனாரும் கவுண்டச்சிபாளையத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைபள்ளியில் பணிபுரிந்தனர் என்றால் சரி. என் தாயார் எந்த ஆண்டு ஓய்வு பெற்றார், என் தந்தை எந்த ஆண்டு ஓய்வு பெற்றார் என்றால் என் தாயர் 1988 லிலும் என் தந்தை 1991 ம் ஆண்டும் ஓய்வு பெற்றனர். 1996 க்கு முன்பாகவே எனக்கு, என் சகோதரி மற்றும் சகோதரருக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரி. என் சகோதரியின் கணவர் பெயர் ராஜேந்திரன். ராஜேந்திரன் தகப்பனார் பெயர் ஜோசப். என் சகோதரியின் கணவர் கவுண்டச்சிபாளையத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். கவுண்டச்சிபாளையத்தில் நடராஜன் மகன் ராஜேந்திரன் என்பவரும் இருந்தாரா என்றால் இல்லை. அவ்வாறு ஒரு நபர் உள்ளார் என்பதை தெரிந்து கொண்டே நான் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால சரியல்ல. 1996 ல் என் பெற்றோருக்கு சேமிப்பு இருந்ததா என்றால் இருந்தது. எவ்வளவு சேமிப்பு இருந்தது என்று எனக்கு தெரியாது. என் தகப்பனார் ஓய்வு பெறும்போது சுமார் 43 ஆயிரமும் என் தாயார் 47 ஆயிரமும் பெற்றனர். என் தாய் தகப்பனாரின் வருமானத்தை வைத்து தான் என் பெற்றோர்கள் அவர்களது மக்களுக்கு படிப்பு திருமணம் செய்து வைத்தனர் என்றால் சரிதான். என் தாயாரின் தகப்பனார் முத்தையா என்பவருக்கு தாவா சொத்து ஏக்கர் 1.14 முழுமையாக பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். முத்தையா இறந்தபோதும் அந்த விஸ்தீரணம் இருந்தது. என் தாத்தா முத்தையா இறந்த பின் இந்திய வாரிசுரிமை சட்டப்படி என் தாயாருக்கு 1/3 பங்கு 38 சென்ட் பாத்தியம். அதேபோன்று என் தாயாரின் சகோதர் ராஜநாயகத்திற்கு 1/3 பங்கு பாத்தியம். மற்றொரு தாய் மாமன் துரைராஜ் க்கு 1/3 பாகம் 38 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான். 06.07.1998 ல்

என் தாயார் 38 சென்டை ராஜநாயகத்திடமிருந்து கிரயம் பெற்றார் என்றால சரிதான். 25.10.1999 ல் என் தாயார் துரைராஜிடமிருந்து 1/3 பாகம் 38 சென்ட் கிரயம் பெற்றார். 1999 ல் என் தாயாருக்கு தாவா சொத்து முழுவதும் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் அந்த சொத்தை கிரயம் பெறுவதற்கு என் தாயர் தந்தையருக்கு உதவி செய்யவில்லை என்றால் சரிதான், நான் படித்துக கொண்டிருந்தேன். 1998 க்கு முன்பாக என் சகோதரர்கள் மற்றும் என் சகோதரி வேலையில் இருந்தனர் என்றால் சரிதான். தாவா சொத்தை ஒட்டி வடபுறம் தங்கவேல் கவுண்டர் என்பவரின் பூமி உள்ளது என்றால் சரிதான். தென்புறம் தங்கவேல் கவுண்டர் மற்றும் அவினாசி கவுண்டருக்கும் பூமி உள்ளது என்றால் சரிதான். 1998 ம் ஆண்டு என் தாயார் சொத்தை ராஜநாயகத்திடமிருந்து கிரயம பெறுவதற்காக தங்கவேல் கவுண்டரிடம் ரூ.45000/- கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அது புரோநோட் கடன் என்றால் சரியல்ல. 1999 ம் ஆண்டு துரைராஜிடமிருந்து சொத்தை கிரயம் பெறுவதற்காக என் தாயார் தங்கவேல் கவுண்டரிடம் ரூ.25000/-மும் அவினாசி கவுண்டரிடம் ரூ.25000/- புரோநோட் அடிப்படையில் கடன் பெற்றார் என்றால் சரியல்ல. கவுண்டச்சிபாளையம், பெருந்துறை, வெள்ளோடு ஆகிய ஊர்களில் பல நபர்களிடம் எங்கள் பெற்றோர் புதிய வீடு கட்டி முடிக்கவும் தாவா சொத்தை கிரயம் பெறுவதற்காகவும் குடும்ப வெளிக் கடன்களை அடைக்கவும் 1997-1999 ம் ஆண்டு வாக்கில் கடன் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கடன் பெற்ற தொகை 3 லட்சத்திற்கு மேல் இருந்தது என்றால் சரியல்ல. வெளி நபர்களிடம் வாங்கிய கடனை அடைப்பதற்காக என் தாயார் தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக மிகுந்த முயற்சிகள் செய்து வநதார் என்றால் சரியல்ல. நான் ஈரோடு கிருஸ்துவ மகளிர் கல்லுரியில் தூலகராக பணியாற்றி வருகிறேன். நான் நூலகர் பணி மற்றும் என் சகோதரர் சாந்தி பிரேம்குமாருடன் சேர்ந்து வார விடுமுறை நாட்களில் நில தரகு தொழிலும் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. 1996 முதல் 2006 வரை தமிழ்நாட்டில் நில விற்பனை கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. அந்த கால கட்டத்தில் அரசு நிர்ணயிக்கும் வழிகாட்டுதல் மதிப்பு சந்தை மதிப்பை விட அதிகமாக இருந்தது என்றால் சரியல்ல. அதனால் நில கிரயங்கள் குறைவாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த மந்த நிலை 2007 வரை தொடர்ந்தது என்றால்

சரியல்ல. அதனால் என் தாயார் வெளி கடன்களை அடைப்பதற்காக சொத்தை விற்பனை செய்ய முயற்சி செய்தும் முடியவில்லை என்றால் சரியல்ல. கடைசியாக சின்னசாமி என்ற தரகு தொழில் செய்யும் கூட்டாளி மூலமாக கவுண்டச்சிபாளையம் வாழமடையம்மன் கோயிலுக்கு மாதங்தோறும் வாதியும் அவரின் கணவரும் வருவார்கள் என்றும், அந்த சமயத்தில் என் தாயாரும் நாங்களும் சேர்ந்த சொத்தை வாங்கிக்கொள்ளுமாறு பல மாதங்களாக சொல்லி வந்தோம் என்றால் சரியல்ல. வாதியின் கணவரை 2000 ம் ஆண்டு தான் முதன் முதலில் பார்த்தோம். 2000 ம் ஆண்டில் வாதியும் அவரது கணவரும் நில சந்தை மதிப்பு குறைவாக இருந்ததால் நிலத்தை வாங்க விருப்பப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 25.09.2000 த்தில் வாதி மற்றும் அவரின் கணவரிடம் நிலத்தை வாங்கிக் கொள்ள வற்புறுத்தியதன் பேரில் ரூ.1,50,000/-க்கு குறைவாக இருந்ததை ரூ1,75,000/-க்கு கிரயம பேசி அதே தேதியில் ரூ.1,50,000 முன்பணமாக பெற்றுக் கொண்ட நாங்கள் அனைவரும் பெற்றுக் கொண்டு பெருந்துறை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு கிரய ஒப்பந்தம் எற்படுத்தி பதிவு செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. அந்த கிரயத்தை உடனடியாக எழுதிக் கொள்ளலாம் என வாதியின் கணவர் சொன்ன போது என் தாயார் தான் கிரயம் உடனடியாக எழுதிக்கொண்டால் கடன்காரர்கள் தொந்தரவு கொடுப்பார்கள் என 2 ஆண்டு காலம் நிர்ணயம் செய்ய கேட்டுக் கொண்டதன் பேரில் காலக்கெடு 2 ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.08.29 17:31:20 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS